II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 90 of 2020**

Deposition of witness for the 4th Defendant /DW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 24.06.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : S.Babu | Age | : |
| Father's / Husband's Name | : | Village | : |
| Taluk | : | Distict | : |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் 2016ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகிறேன். 1ம் பிரதிவாதி எங்கள் நிறுவனத்தை அணுகி பணம் கேட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியும். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. வாதியின் வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். எதிர்வழக்குரை சங்கதிகளை எங்கள் நிறுவனம் மூலமாக பெற்று தாக்கல் செய்தேன். எதிர்வழக்குரை சங்கதிகள் எனக்கு தெரியும். நான் எதிர்வழக்குரைக்கான விவரங்களை கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2017ம் ஆண்டு ரூ. 5 லட்சம் கடன் பெறுவதற்காக எங்கள் நிறுவனத்தை அணுகினார். அந்த கடனுக்காக திருவேற்காடு அன்னை அபிராமி நகரில் உள்ள சொத்தை அடமானம் வைத்தார். அந்த சொத்து இரண்டு அட்டவணையாக உள்ளது. ஒரு சொத்து 999 சதுர அடி, இன்னொரு சொத்து 547 சதுர அடி ஆகும். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.3 தான் கடன் ஒப்பந்த ஆவணம் என்றால் சரிதான். அதில் பிளாட் எண்.2 மற்றும் 3 என சொத்து விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.சா.ஆ.2–ன் படி 999 சதுர அடி கொண்ட மனை தான் அடமானமாக

வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2–ல் சொத்து விவரம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. அடமான பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றல் இல்லை. பி.சா.ஆ.2 கடன் ஒப்பந்த ஆவணத்தை தவிர வேறு ஆவணம் எங்களிடம் இல்லை என்றும் இருந்திருந்தால் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. வழக்குரையில் இரண்டு அட்டவணை சொத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் அட்டவணையில் உள்ள அடிமனை மட்டும் தான் எங்களிடம் அடமானம் வைதக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் அட்டவணை சொத்திற்கும் எங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அதனை பொருத்து நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்கமுடியாது என்றாலும் சரியல்ல. மேலும் வழக்கு சொத்தில் உள்ள கட்டிடங்களை பொருத்து வாதி கோரியுள்ள பரிகாரத்தை நான் ஆட்சேபிக்க முடியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வழக்கு சொத்துகளை எப்பொழுது எவ்வாறு கிரையம் வாங்கினார் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி அளித்த பணத்தை கொண்டு தான் வழக்கு சொத்துகள் 1ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் பெறப்பட்டு அதில் உள்ள கட்டிடங்களும் கட்டப்பட்டன என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் பெயரில் தான் வழக்கு சொத்துகள் உள்ளன. வாதி தரப்பில் அவர் அளித்த தொகைக்கான விவரங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களில் வாதிக்கு சம பங்கு உள்ளது என்றால் சரியல்ல. வாதியின் பங்கு உரிமையை பொருத்து நான் தீர்மானிக்க முடியாது என்றால் எங்களிடம் தான் அடமானம் வைக்கப்பட்டுள்ளது. எங்களை பொருத்தவரை கடன் பெற்ற பணத்தை தான் நாங்கள் வசுல் செய்ய முடியுமே தவிர சொத்தை கேட்க முடியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இதுவரை எவ்வளவு ரூபாய்

செலுத்தியுள்ளார் என்று நாங்கள் குறிப்பிடப்வில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கடன் தவணையை சரியாக செலுத்தவில்லை. இசைவு தீர்ப்பாயம் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்குள் வாதி மூலமாக இந்த வழக்கை 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துவிட்டார். அறிவிப்பு அனுப்பினோமா என்றால் இல்லை. வாய்மொழியாக தெரிவித்தோம். எவ்வித நடவடிக்கையும் நாங்கள் எடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெற்ற கடனுக்காக வாதியின் பங்கில் நாங்கள் நடவடிக்கை எடுக்கமுடியாது என்றும் 1ம் பிரதிவாதியின் பங்கில் தான் எங்கள் கடனை கோர முடியும் என்றாலும் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி தான் கோரியாவாறு பாகப்பிரிவினை பெறதக்கவர் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.